செ.வெ.எண்:31 நாள்:11.07.2021

கோயம்புத்தூர் மாவட்டம்

# வாளையார் சோதனை சாவடியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

********

கேரளா மாநில எல்லையான வாளையார் சோதனை சாவடியில் இன்று(11.07.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது வருவாய் கோட்டாட்சியர்(தெற்கு) திரு.செந்திலரசன், துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.செந்தில் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த அரசு வழிகாட்டுதலின்படி, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் தற்போது கொரோனா தொற்று பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கொரோனா தொற்று பரவல் சதவீதமும் மிக குறைந்துள்ளது.

இந்நிலையில் அண்டை மாநிலமான கேரளா மாநிலத்திலிருந்து, வருபவர்களால் கொரோனா தொற்று பரவமால் இருப்பதற்காக தடுப்பு நடவடிக்கையாக, கேரளா மாநிலத்தின் எல்லைப்பகுதிகளான கோயம்புத்தூர் மாவட்டத்தின் வாளையார், முள்ளி, மேல்பாவியூர், வேலந்தபாளையம், வீரப்பகவுண்டனூர், கோபாலபுரம், மீனாட்சிபுரம், வழுக்குப்பாறை, ஆனைகட்டி உள்ளிட்ட 13 சோதனை சாவடிகளில் சுகாதாரத்துறை, வருவாய்துறை மற்றும் காவல்துறை ஆகிய துறைகள் தீவிர கண்காணிப்பு பணியினை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், 24 மணிநேரமும் சுழற்சி முறையில் பணியாற்றும் வகையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, இன்று வாளையார் சோதனைச் சாவடியில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சோதனைச்சாவடியில் மருத்துவ முகாம்களை அமைத்து, கோயம்புத்தூர் மாவட்டதிற்கு வரும் நபர்களுக்கு காய்ச்சல் பரிசோதனை செய்யவும், வருவாய்த்துறை மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், திருமண நிகழ்வுகளுக்காகவும், வணிகத்திற்காகவும், மருத்துவத்திற்காகவும், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருபவர்களை, கட்டாயம் இ-பதிவு இருந்தால் மட்டுமே அனுமதிக்க காவல்துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த மாதங்களில் இருந்த கொரோனா தொற்றுப் பாதிப்பைவிட தற்போது தொற்று பாதிப்பு வெகுவாக குறைந்துள்ளது. இதற்கு கோயம்புத்தூர் மாவட்ட பொதுமக்களின் ஒத்துழைப்பும் மிக முக்கிய காரணமாகும்.

தற்போது ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளதால், பொது மக்கள் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக வெளியில்செல்லும் போது கண்டிப்பாக முகக் கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை முறையாக கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும், கொரோனா தொற்றை முழுவதுமாக நம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்து ஒழிப்புதற்கு பொதுமக்கள் முழுஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**